

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் 50.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட பாரா பாட்மிண்டன் உள்விளையாட்டரங்க மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, பாராலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை துளசிமதி முருகேசன், பாரா பாட்மிண்டன் விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் 35.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட ரோலர் ஸ்கேட்டிங் மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள ஒலிம்பிக் அகாடமியில் 28.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஹோம் ஆப் செஸ் அகாடமியை திறந்து வைத்து பயிற்சி ஆட்டம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துணை மேயர் மு. மகேஷ்குமார், உயர் அதிகாரிகள் முனைவர் அதுல்ய மிஸ்ரா, ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (18.11.2025) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாச்சலேசுவரர் திருக்கோயில் கார்த்திகை தீபத்திருவிழா முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

